**M.C.No. 21/2023** Date : 06-06-2026

**ம.சா.-2 பாண்டியன்**

(எதிர்மனுதாரர் ஆஜர். )

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். முதல் விசாரணை சாட்சியமாக நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் எனது சொந்த சின்னம்மாவின் மகள் ஆவார். மனுதாரரின் நிச்சயதார்த்தம் மற்றும் திருமண விழாவின் போது நான் கலந்து கொண்டேன் என்றால், நிச்சயதார்த்த விழாவில் கலந்து கொள்ளவில்லை, திருமணத்தில் கலந்து கொண்டேன். மனுதாரருக்கு திருமணத்தின் போது கொடுக்கப்பட்டதாக கூறப்படும் நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் யார் வசம் உள்ளது என்றால் யார் வசம் உள்ளது என்று எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பின்னர் மனுதாரரும் எதிர்மனுதாரரும் பஞ்சாப் மாநிலம் சென்று குடியேறி விட்டார்கள் என்றால் சரிதான். அங்கு இருவரும் மகிழ்ச்சியாக தான் குடும்பம் நடத்தினார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மனுதாரரின் தாயார் திடீரென இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

2) நானும் ராணுவத்தில் பணியாற்றினேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ராணுவத்தில் பணியாற்றி வருவதால் அவருக்கு திடீரென விடுமுறை கிடைப்பது கடினம் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனுதாரரும், எதிர்மனுதாரரும் பஞ்சாப் மாநிலத்தில்

இருந்தபோது எதிர்மனுதாரர், மனுதாரரை யாரோடு தொடர்புபடுத்தி பேசினார் என்று குறிப்பிட்டு நபரின் பெயரை எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அவரது தகப்பனார் மற்றும் சகோதரரிடம் பேசக்கூடாது என்று எதிர்மனுதாரர் கூறினார் என்ற விவரம் மனுதாரர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ராணுவத்தில் பணியாற்றி வரும்போது அங்குள்ள முகாம்களில் குடும்ப பிரச்சினை சம்பந்தமாக கவுன்சிலிங் நடத்தப்படும் என்றால் சரிதான். மேற்படி கவுன்சிலிங்கில் மனுதாரரும் கலந்து கொண்டார் என்றால் சரிதான்.

3) மனுதாரருக்கு வளைகாப்பு நிகழ்வு நடந்தபோது நான் ராணுவத்தில் பணியாற்றி வந்தேன் என்றாலும், வளைகாப்பில் நான் கலந்துகொள்ளவில்லை என்றாலும் சரிதான். பொதுவாக வளைகாப்பு நிகழ்வுகள் மாப்பிள்ளை வீட்டில் வைத்து நடப்பது வழக்கம் என்றால் சரிதான். மனுதாரருக்கு குழந்தை பிறந்த சமயத்தில் எதிர்மனுதாரர் ராணுவத்தில் பணியில் இருந்தார் என்றால் சரிதான். பின்னர் எதிர்மனுதாரர் விடுமுறை எடுத்து ஊருக்கு வந்து தனது தாயாரை அழைத்துக்கொண்டு மனுதாரரையும் அவரது குழந்தையையும் பார்க்க வந்தபோது மனுதாரரும், அவரது அக்காவும் எதிர்மனுதாரரை குழந்தையை பார்ப்பதற்கு அனுமதிக்கவில்லை என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. பின்னர் மனுதாரரையும், குழந்தையையும் நல்ல முறையில் பார்த்துக் கொள்வதாக சொல்லி எதிர்மனுதாரர் அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்றதை நான் கேள்விப்பட்டேன் என்றால்

சரிதான். குழந்தையை வேறொரு வீட்டில் வைத்துக்கொண்டு மனுதாரரை மிரட்டியதாக சொல்லும் சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

4) எதிர்மனுதாரர் மீது மனுதாரர் எந்த காவல் நிலையத்தில் என்ன காரணத்திற்காக புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதன் பின்னர் மனுதாரரும் எதிர்மனுதாரரும் அசாம் மாநிலத்தில் சேர்ந்து வாழ்ந்து வந்தனர் என்றால் சரிதான். மனுதாரரும் எதிர்மனுதாரரும் அசாம் மாநிலத்தில் நல்ல முறையில் சேர்ந்து வாழ்ந்து வந்தபோது மனுதாரரின் தகப்பனாரும், சகோதரரும் மனுதாரரின் தகப்பனாரை கவனித்துக் கொள்வதற்காக ஊருக்கு வந்துவிடும்படி கூறினார்கள் என்றாலும் அதன் பெயரில் தான் நானும் மனுதாரரின் சகோதரரும் அசாம் மாநிலம் சென்று மனுதாரரை ஊருக்கு அழைத்து வந்தோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரரை அசாமில் இருந்து அழைத்து வரவேண்டும் என்றும், மனுதாரரின் சகோதரர் சொன்னதன் பெயரில் தான் நானும் அவரும் அசாம் மாநிலம் சென்று மனுதாரரையும் குழந்தையையும் அழைத்து வந்தோம்.

5) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் சின்ன சின்ன மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருந்த நிலையில் அதனை சரி செய்வதற்கு முயற்சி செய்யாமல் நாங்கள் அசாம் மாநிலம் சென்று மனுதாரரையும் குழந்தையும் ஊருக்கு அழைத்து வந்து விட்டோம் என்றால் சரியல்ல. அதன் பின்னர் மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ

வைப்பதற்கு நான் எந்த விதமான முயற்சி எடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரரை தன்னுடன் சேர்ந்து வாழ உத்தரவிட வேண்டும் என்று கூறி எதிர்மனுதாரர் திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தால் ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்காக நடத்தப்படும் பள்ளியில் அவர்களது குழந்தையை சேர்த்து படிக்க வைப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடம் இருந்து விவாகரத்துகோரி மனுதாரர் இதுவரை எந்தவித வழக்கினையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தற்போதும் மனுதாரருடன் தனது குழந்தையுடனும் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றும் மனுதாரர் எந்தவிதமான காரணமும் இன்றி எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்துவாழ மறுத்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனது குழந்தைக்கு நல்ல கல்வி கொடுப்பதை மனுதாரர் தான் தடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுப்பதற்கு எதிர்மனுதாரருக்கு சட்டப்படியான பொறுப்பு இல்லை என்றால் சரியல்ல.